## இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.தே.க.ச) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுச் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையினை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்வதற்கு அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள ், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- அதிகாரசபையின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | குறித்த நியமத்தின் தொடர்புடனான இனக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 25(ஏ) பிரிவின் பிரகாரம் எதிர்வரும் கொடுக்கல் வாங்கல்கள், எதிர்வரும் உடன்படிக்கை, பரிமாற்ற உடன்படி க்கைக்காக நிதி கிடைத்தல் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய போதும் அரச தனியார் பங்குடமை வியாபாரங்களின் கீழ் மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு கிடைத்த ரூபா 5,500,000 ஆன் தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சலின் கீழ் ஏனைய வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். | நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 29 பிரிவின் பிரகாரம் நேர் முறையில் காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது மிகையுடன் தேறிய காசுப் பாய்ச்லிற்காக வெளிப்படுத்தப்பட | இணங்குகிறேன். | நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய போதும் அதிகார சபையினால் அவ்வாறு செய்யதிருக்கவில்லை. | | |
| (இ) | சுமார் ஒரு ஏக்கர் அளவான மன்னார் ஓலைத்துடாவ கடற்பாசி இனவிருத்தி நிலையத்தின் காணி ரூபா 800,000 ரூபா பெறுமதியில் 2016 ஆம் ஆண்டு முதல் 30 வருடங்களுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 06 பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் வாடகை கொள்வனவு ஆதனமாக கணக்குகளில் இனங்கண்டிருக்கவில்லை. | இணங்குகிறேன். | குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட காணி வாடகை கொள்வனவு ஆதனமொன்றாக கணக்குகளில் இனங்காண வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 8 இன் 100 பிரிவு பிரகாரம் அறிக்கையிடும் திகதியிலுள்ள ஒவ்வொரு எதிர்பாராத பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டிய போதும், வெலிகந்த இனவிருத்தி நிலைய நிர்மாண நடவடிக்கைகளிற்கான ஒப்பந்தம் நிர்மாண கம்பனியொன்றிற்கு நியாய தீர்ப்புசபை தீர்மானமொன்றினால் செலுத்த நேரிட்டிருந்த ரூபா 26,839,477 தொடர்பில் அதிகாரசபையினால் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தமையும் அதிகாரசபைக்கு எதிராக ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்கள் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த 10 வழக்குகள் தொடர்பாகவும் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக வளர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தை அறவிடுவது தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 193 வழக்குகள் தொடர்பாகவும் அவ்வாறு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 வருடாந்த கணக்குகளின் ஊடாக அதிகார சபையுடன் காணப்படும் சட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்பாராதவைகள் தொடர்பாக வெளிப்படுத் நடவடிக்கை எடுக்கப்படும். | அறிக்கையிடும் திகதியில் காணப்படும் எதிர்பாரா பொறுப்புக்கள் அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு அபிவிருத்தித் நிகழ்சித் திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 482,746,457 ஆன அமைச்சு மானியம் மற்றும் ரூபா 10,454,968 ஆன வெளிநாட்டு மானியமாக கிடைத்த மொத்த மானியக் கூட்டுத் தொகை ரூபா 493,201,425 ஆன இலங்கையின் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 95 பிரிவின் ஏற்பாடின் பிரகாரம் வருமானத்திற்கு இனங்காணாது கருத்திட்ட கணக்குகளிறந்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. அந்த நிகழ்சித் திட்டங்களிற்காக மீளர்யவாண்டில் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய இந்த விடயம் தொடர்பாக மேலும் ஆய்வு செய்து கொண்டிருப்பதுடன் 2024 வருடாந்த கண்கினூடாக அது தொடர்பாக விடயங்களை முன்வைக்க அல்லது சரிசெய்ய வேண்டுமெனில் அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அதிகார சபைக்கு அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களிற்காக கிடைக்கும் அமைச்ச மானியம் மற்றும் வெளிநாட்டு மானியத்தை நியமம் பிரகாரம் வருமானத்திற்கு இனங்காண வேண்டும். |

மேற்கொள்ளப்பட்ட ரூபா 483,621,100 ஆன மொத்த செலவும் வருமானக் கூற்றிற்குள் உட்படுத்தாது கருத்திட்ட கணக்குகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ளை நீர் உயிரின அபிவிருத்தி நிலையத்திற்கு 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் கிடைத்த வருமானங்களிலிருந்து வங்கியில் இடப்படாது துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்த ரூபா 1,628,497 ஆன வருமானம் 2022 ஆம் ஆண்டு வரையும் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் நிறுத்தி வைத்த ஈட்டலாக மற்றும் பெற வேண்டியதாக இனங்காணப்படவில்லை. இது தொடர்பான செம்மையாக்கல் 2023 ஆண்டு கணக்குகளில் செய்யப்பட்டுள்ளன. | நிதி துஷ்பிரயோகம் தொடர்பாக தேவையான புலனாய்வுகளை மேற்கொண்டு அதிகாரசபைக்கு கிடைக்கும் அனைத்து வருமானங்களையும் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ரூபா 75,880,829 ஆன இறால் இனவிருத்தி நிலையம், நீர் உயிரியல் அபிவிருத்தி மற்றும் தர மேம்பாட்டு கருத்திட்டத்தினால் 2009 திசெம்பர் 30 திகதி அதிகார சபைக்கு ஒப்படைத்திருந்த போதும் அதனை அத்திகதி முதல் சொத்தாக இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. 2015 ஜுன் 22 திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இந்த இனவிருத்தி காணியை ரூபா 3,721,600த இற்கும், கட்டிடத்தை ரூபா 44,230,000 இற்கும், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், மோட்டார் சைக்கிள்கள், வாயு பதனாக்கி இயந்திரம், ஜெனரேட்டர்கள் மற்றும் ஏனைய இருப்புக்களின் பெறுமதி ரூபா 3,146,550 இற்கும் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த உருப்படிகள் எதுவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் எடுக்கப்படவில்லை பண்டக கணிப்பீட்டு அறிக்கைகளினூடாகவும் இந்த பண்டங்களின் நிலைத்திருத்தல் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த சொத்துக்கள் 2016 ஆம் ஆண்டு முதல் பொது தனியார் கூட்டு ஒப்பந்தங்களின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த முதலீட்டு பெறுமதி 2016 ஆம் | புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இறால் இனவிருத்தி நிலைய நிர்மாணக் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்குகளில் இனங்காணப்படாதது அந்த காணி இதுவரை அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்படாததால் ஆகும். | அதிகாரசபையினால் பயன்படுத்தும் சொத்துக்களை சுவீகரித்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரையிலும் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்படாததால் 2022 திசெம்பர் 31 திகதியன்று முதலீட்டு சொத்துக்கள் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஆண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்குரியதாக ரூபா 1,050,000 ஆன புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இறால் இனவிருத்தி நிலையத்திற்காக வெற வேண்டிய குத்தகை தொகையை கணக்கீடு செய்திருக்காததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் மற்றும் பெறவேண்டிய வருமானம் அந்த அளவால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | பெறவேண்டிய குத்தகை தொகையை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை அமைச்சு மானியங்களிலிருந்து நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹம்பாந்தோட்டை ரெகவ கிரப்சிட்டி இனவிருத்தி நிலையத்திற்கான ரூபா 221,719,566 ஆன செலவானது நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் பிற்போட்ட வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த பெறுமதியை பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிலிருந்து அகற்றி வாடகை கொள்வனவு தொங்கல் வருமான கணக்கொன்றாக நடைமுறை அல்லாத பொறுப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டினுள் கணக்கினூடாக இனங்காணப்பட்டுள்ளது முதலீடு செய்யப்பட்ட ரெகவ சொத்துக்களின் மொத்த முதலீட்டு பெறுமதியான ரூபா 221,719,566 என தொகையாகும். ஒப்பந்தத் தொகையை மாத்திரம் கணக்குகளில் இனங்காணப்பட்டால் முதலீட்டுச் சொத்துக்களின் சரியான பெறுமதி பிரதிபலிப்பதிலிலை. | முதலீட்டுச் சொத்துக்களை சரியாக இனங்காண வேண்டும். |
| (உ) | நடைமுறை வேலைகளை மூலதனமாக்கும் போது ரூபா 301,139,489 ஆன நடைமுறை வேலைப் பெறுமதி ரூபா 305,691,169 ஆக மூலதனமாக்குவதன் மூலம் நிதி நிலைமை கூற்றில் சொத்துக்கள் மற்றும் அமைச்சு மானியங்கள் ரூபா 4,551,680 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மறுபரிசீலனை செய்து சரி செய்யவுள்ள பெறுமதிகள் செம்மையாக்கப்படும். | நடைமுறை வேலைகளை சரியாக மூலதனமாக்கி கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | ஒப்பந்தப் பட்டியல்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 4,016,127 ஆன ஒப்பந்த பெறுமதியை செலுத்த வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யது உள்நாட்டு மானியங்களில் செலவு வைக்கப்பட்டதால் நடைமுறை பொறுப்புக்கள் அந்த | இணங்குகிறேன். | ஒப்பந்தப் பட்டியல்களிற்கு செலுத்த வேண்டிய பெறுமதியை செலுத்த வேண்டிய மீதியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (எ) | அமைச்சு மற்றும் அரச நிறுவனங்களினால் அதிகார சபைக்கு ஒப்படைத்துள்ள தற்போது பயன்பாட்டில் உள்ள ஹெக்டேர்களில் 62.7702 ஆன 10 காணிகள், 10 ½ ஏக்கரான 2 காணிகள் மற்றும் பரிசஸ் 41,197 ஆன காணிகளின் பெறுமதிகளை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2022 ஆண்டில் சுவீகரிக்காத மற்றும் மதிப்பீடறிக்கை கிடைத்த காணிகள் தொடர்பாக வெளிப்படுத்தல் கணக்கீட்டுக் கொள்கைகள் 2.9.1 மற்றும் 2.9.2 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மதிப்பீடறிக்கை கிடைத்த 04 காணிகள் கணக்குகளில் செம்மையாக்கப்படாதது அனைத்து காணிகள் தொடர்பான செம்மையாக்கல்களை ஒரே தடவையில் மேற்கொள்ளும் நோக்கில் ஆகும். | அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் காணிகள் தொடர்பாக பெறுமதிகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஏ) | 2014 ஜுலை 16 திகதிய மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் பட்டுலுஓயா நீர் உயிரின வளர்ப்பு அலுவலகத்தின் காணி ரூபா 4,000,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் அது ரூபா 2,599,000 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் 2022 திசெம்பர் 31 திகதிக்கு நிதி நிலை கூற்றில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி ரூபா 1,401,000 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | தற்போது அனைத்து காணிகளையும் மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பித்துள்ளதுடன அனைத்து மதிப்பீட்டு அறிக்கைகளும் கிடைத்த பின்னர் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படவுள்ளது. | அதிகாரசபையின் சொத்துக்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் ஒன்று 4782 ஆன ரூபா 1,008,663 பெறுமதியான இறந்த தாய் மீன்களின் (Death Brood Stock) இருப்பு ஆண்டுக்கான நட்டம் மற்றும் சேதமாக செலவிற்கு கணக்கீடு செய்யப்படாததால் தேறிய இலாபம் அப் பெறுமானத்தால் கூடுதலாக பிரதிபலித்திருந்தது. | குறிப்பு இலக்கம் 11 இன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிக்கிடையே வித்தியாசத்தினுள் ஆண்டினுள் தாய் மீன்களின் அதிகரிப்பு மற்றும் குறைவு சீராக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் தாய் மீன்களின் பெறுமதி மதிப்பிடப்படுவதன் மீது ஏற்பட்ட இலாபத்தை வருடாந்த மொத்த இலாபம்.ஃ.நட்டத்தை கணக்கிடும் போது இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீன்களின் இறப்பை வேறாக காண்பிக்காததன் ஊடாக அதிகாரசபையின் இலபத்திற்கு எவ்வித வித்தியாசமும் இடம்பெறவில்லை. | இறந்த தாய் மீன்களின் (Death Brood Stock) இருப்பு ஆண்டுக்கான நட்டம் மற்றும் சேதமாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | உடவளவ (புதிய) மற்றும் தம்புள்ளை (genetic) நிலையங்களில் 2022 திசெம்பர் 31 திகதியன்று கி.கி.1878 மற்றும் 7560 அலகுகளான ரூபா 2,759,315 | இணங்குகிறேன் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | தாய் மீன்கள் இருப்பு மீதி நிதி நிலைமை கூற்றில் உயிரியல் மீன் இருப்பில் உள்ளடக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான தாய் மீன் இருப்பு மீதிகள் நிதிநிலைமை கூற்றில் உயிரியல் மீன் இருப்பிற்கு உள்ளடக்கப்படாததால் அவ் அளவினால் நடைமுறையல்லாத சொத்துக்கள் குறைத்து மற்றும் ஆண்டின் விற்பனை கிரயம் அதிகரித்து இலாபம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஓ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 2,855,551 ஆன நிலுவை சம்பளம் மற்றும் ஊதியத்திற்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஆண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டின் இலாபம் குறைவாகக் காட்டப்பட்டது. | இணங்குகிறேன். | மீளாய்வாண்டில் செலுத்தி நிலுவை சம்பளம் மற்றும் ஊதியம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | 2022 ஆம் ஆண்டு காணிகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் ரூபா 225,000 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்று உள்ளடக்கப்பட்டு இருக்காததுடன மதிப்பீடு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 32,971,600 ஆன 10.5 ஏக்கர் அளவான 02 காணிகள் மற்றும் 0.3772 ஹெக்டேர் கொண்ட 02 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மீதிகளிற்காக சரியான அட்டவணை இணைப்பு 06 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் சொத்துக்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | 2018 ஆம் ஆண்டிலிருந்து நிலவிவரும் கருத்திட்டங்களுக்கான ஏற்பாட்டு செலவிடப்பட்டு எஞ்சிய ரூபா 4,812,922 ஆன மீதிக்காக நிறுவனத்திற்கு செலுத்த அல்லது வருமானமாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த செலவின விடயயங்களிற்காக கிடைத்த ஏற்பாடு செலவிடப்பட்டு எஞ்சிய தொகையாவதுடன் அந்த கருத்திட்டத்தை செயற்படுத்திய பிரிவின ஊடாக மீண்டும் பரீட்சித்து இந்த மீதியை மீண்டும் உரிய நிறுவனத்திற்கு வழங்க தேவையான நடவடிக்கை கணக்குகளின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கருத்திட்ட ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டு எஞ்சியிருக்கும் தொகை உரிய நிறுவனத்திற்கு செலுத்த அல்லது வருமானமாக சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (கா) | உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) இனால் ரூபா 143 மில்லியன் செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்விசேட உவர்நீர் மீள் இனவிருத்தி நிலையமொன்றை நிர்மாணித்து 2017 ஆண்டு ஜூன் 29 திகதி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2022 செப்டம்பர் 08 திகதி இந்த சொத்து | மட்டக்களப்பு பல்வகை உவர்நீர் மீன் இனவிருத்தி நிலையத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்குகளில் இனங்காணாதது அந்த காணியை இதுவரை அதிகாரசபைக்கு சுவீகரிக்கப்படாததால் ஆகும். | அதிகார சபையினால் பயன்படுத்தும் சொத்துகளை சுவீகரித்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ரூபா 155,450,000 இற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதும் அதனை இதுவரை அதிக்கார சபைக்கு சுவீகரித்து அப்பெறுமதியை கணக்கீடு செய்யாததால் அப்பெறுமதியால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் அரச மானியங்கள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

**1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| விடயம் | தொகை<br><br><br>ரூபா | சமர்ப்பிக்க ப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மீளாய்வாண்டில் இருப்பு கணிப்பீட்டை மேற்கொள்ளாது, நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள நிலையப் பொறுப்பு அலுவலர்களிடமிருந்து அழைப்பித்த அறிக்கையின் பிரகாரம் இருப்பு பெறுமதி ரூபா 101,615,570 ஆக கணக்கீடு செய்யப்பட்டு இருந்ததுடன் இருப்பு கணிப்பீடின்றி காட்டியுள்ள இந்த பெறுமதியின் சரியான தன்மை மற்றும் நிலைத்திருப்பு உறுதியாகவில்லை. | 101,615,570 | இருப்பு கணிப்பீட்டு அறிக்கை | அதிகார சபையினால் வருடாந்த இருப்பு கணிப்பீடு குழுவொன்றின் மூலம் இருப்பு கணக்கெடுப்பு இதுவரை செய்யப்படவில்லை. அதிகாரசபையின் பரவல் மற்றும் மேற்பார்வையில் இருப்புக்கிடையில் உயிரியல் இருப்பு நிலவுவதன் மீது இது சற்று கடினமான பணியாகும். எனினும், கணக்காய்வினால் சுட்டிக்காட்டியவாறு 2024 ஆண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு பெறுமதியின் சரியான தன்மை மற்றும் நிலைத்துள்ளமை யை உறுதி செய்ய கொள்ள இருப்புக் கணிப்பீடொன்று மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கா ன தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 136, 137, 138, 139 | நிறுவனத்தில் மென்பொருள் தொகுதியொன்று செயற்பட்ட போதும், அந்த மென்பொருன் தொகுதிக்கு தரவுகளை உள்ளீடு செய்தல், தரவு பரிசீலனை, அறிக்கை பெற்றுக் கொள்ளல் மற்றும் திருத்துதல் போன்ற செயல்களிற்கு அதிகாரசபை உரியவாறு அதிகாரத்தை ஒப்படைத்திருக்கவில்லை. | மென்பொருள் தொடர்பாக உள்ளக சுற்றறிக்கையொன்று வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் அனைத்து அலுவலர்களிற்கும் தேவையான பயிற்சிகள் மையத்தை மென்பொருளுடன் இணைக்கும் சந்தர்ப்பத்தில் | நிதிப் பிரமாணங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே மையத்தை மென்பொருளுடன் இணைக்க தனி கடவுக் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரை இணைக்கப்பட்டுள்ள மையங்கள் ஊடாக உள்ளீடு செய்யப்படும் தரவுகள் எவராலும் மாற்றவோ அல்லது அழிக்கவோ முடியாது. அதன் பிரகாரம் உள்ளீடு செய்யப்பட்ட தரவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியும். இணைக்கப்படாத மையங்களும் 2024 ஆண்டில் இணைக்கப்படும். | |
| (ஆ) | 2022 ஜுலை 08 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை 30/94 (4.4) | அரச கூட்டுத்தாபனங்களினால் பயன்படுத்தப்படும் வெளிநாட்டு மானியம் தொடர்பாக செலவின மதிப்பீட்டிற்கு ஏற்பாடுகளை வழங்கி வரிசை அமைச்சினூடாக நிறுவனத்திற்கு வெளிநாட்டுதவி வழங்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் அதிகார சபைக்கு கிடைத்துள்ள ரூபா 10.45 மில்லியனான வெளிநாட்டு மானியம் தொடர்பாக அந்த ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிககை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை விரைவில் எமது நிறுவனத்திற்கு வழங்கும் தேவைப்பாட்டின் மீது குறித்த நிதிஉதவியை வழங்கும் அமைப்பினால் நேரடியாக எமது அதிகார சபைக்கு இந்த தொகையை செலவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிநாட்டு மானியம் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் 2011 ஏப்ரல் 21 திகதிய இலக்கம் MOEF/ERD/2011/01 கொண்ட சுற்றறிக்கை மற்றும் 2014 ஜுன் 26 திகதிய இலக்கம MOEF/ERD/2014/01 கொண்ட சுற்றறிக்கை | வெளிநாட்டு மானியம் வழங்குவதற்காக மற்றும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தை அறிவுருத்துதல் மற்றும் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதும் அதிகார சபைக்கு கிடைத்துள்ள ரூபா 10.45 மில்லியனான வெளிநாட்டு மானியம் தொடர்பாக அவ்வாறு நடவடிககை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை விரைவில் எமது நிறுவனத்திற்கு வழங்கும் தேவைப்பாட்டின் மீது குறித்த நிதிஉதவியை வழங்கும் அமைப்பினால் நேரடியாக எமது அதிகார சபைக்கு இந்த தொகையை செலவு வைக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு மானியம் தொடர்பாக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 103,989,075 ஆன் மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நெரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,567,704 அனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 71,421,371 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு வருமானம் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 75,860,652 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 8,262,017 ஆன நடைமுறை வேலைகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ஒப்பந்த இலக்கம் 2021/R/MURL/01 கொண்ட ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முருத்துவெல நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தின் நிர்மாணப்பணிகள் இதுவரை நிறைவு செய்யப்படவில்லை. | தீர்வுத் தீர்மானத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு அறவிட வேண்டிய தொகையை ஒப்பந்ததாரரின் முற்பண பிணையை பணமாக்குவதன் மூலம் அறவிடுவதாக அறிவிக்கிறேன். | கருத்திட்டப் பணிகளை திட்டமிட்டவாறு விரைந்து பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முருத்துவெல வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தின் ஒப்பந்த இலக்கம் 2021/R/MURL/02 கொண்ட புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒப்பந்த பலவீனமாக செயலாற்றுகை காரணமாக 2022 ஏப்ரல் 20 திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்தது. முற்பணமாக மற்றும் கொடுப்பனவு பட்டியல்களிற்காக செலுத்திய ரூபா 4,412,475 தொகையை அறவிட முடியாதிருந்ததுடன் செலுத்திய தொகையும் விளைவற்ற செலவாக காணப்பட்டது. | முற்பண காப்பின் செல்லுபடித் தன்மையை 24.03.2024 வரை நீடிக்கப்பட்டுள்ளது. செயலாற்றுகை பிணைமுறியின் பணத்தை அறவிட்ட போதும் முற்பணத்திற்குரிய தொகையை அறவிட முடியவில்லை. அந்த கம்பனியுடன் 2023.11.09 திகதி கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் அக் கம்பனியால் கடிதமொன்றை எமக்கு முன்வைத்துள்ளதுடன் அந்த கடிதத்தை ஆய்வு செய்து தேவையான நடவடிக்கள் மேற்கொள்ளபடவுள்ளது. | முற்பணமாக மற்றும் கொடுப்பனவு பட்டியல்களிற்காக செலுத்திய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரெக்கவ 42 ஏக்கர் நிலப்பரப்பில் சேற்று நண்டு வளர்ப்பு கருத்திட்டத்திற்காக அமைச்சு நிதி ரூபா 221 மில்லியன் செலவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட குளங்கள் மற்றும் அதனுடன் சாரந்த நிர்மாணங்கள், கருத்திட்ட தோல்வியின் காரணமாக உவர் நீர் இறால் வளர்ப்பிற்காக தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு 2021 திசெம்பர் 02 திகதி 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 1998 இன் 53 | 2022 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரெக்க சொத்தின் மொத்த முதலீட்டு பெறுமதியான ரூபா 221,719,566 தொகை கணக்குகளில் இனங்காணப்பட்டுள்ளது. ஒப்பந்தத் தொகையை மாத்திரம் கணக்குகளில் இனங்கணப்படடது புதிய முதலீட்டுச் சொத்தின் சரியான பெறுமதி குறிப்பிடப்படுவதில்லை. மேலும் மொத்த தொகையையும் கணக்குகளில் இனங்கண்டுள்ளது | சட்டத்தின் கடமைகளை நிறைவேற்றும் வகையில் அதிகார சபை கருத்திட்டங்களை சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் அரச நிதியால் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணித்த பின்னர் தனியார் தரப்பினரிற்கு குத்தகைக்கு விடுவது அதிகார சபையின் அடிப்படை பணியல்லாததுடன் சட்டத்தால் நீர் உயிரின வளர்ப்பு மேம்பாடு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக மாத்திரம் ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.<br><br>2019 மார்ச் 26 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2019 இன் ஏற்பாடுகள் பிரகாரம் இந்தத் கருத்திட்டத்திற்கு தனியார் துறையினரால் பணத்தை ஈடுபடுத்தியில்லாததால் அரச தனியார் கூட்டு முயற்சி கருத்திட்டமொன்றாக கருத முடியாத போதும் அரச தனியார் கூட்டு முயற்சி கருத்திட்டம் ஒன்றாக அபிலாஷைகள் அழைக்கப்பட்டிருந்தது. | இந்த முதலீட்டு சொத்தின் பெறுமதியிலிருந்து முதலாவது முதலீட்டாளரின் காலப்பகுதியில் அறவிடப்படாத பெறுமதியை பின்னர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தனியார் பங்குதாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளதால். | |
| (ஈ) | திவி நெகும கருத்திட்டத்திற்காக அதிகார சபையினால் 2011 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை 6450 நலனாளிகளுக்கு ரூபா 229,035,250 வழங்கியிருந்த போதிலும் வழங்கப்பட்ட அத்தொகை கணக்கீடு செய்யப்படிருக்கவில்லை. நலனாளிகளிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிட சரியான முறைமையொன்றை அறிமுகப்படுத்தி இருக்காததுடன் இற்றைப்படுத்திய கடன்படுனர் பதிவேடொன்றும் அதிகார சபையிடம் இருக்கவில்லை. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை நலனாளிகளிடமிருந்து திரட்டப்பட்ட ரூபா 66,326,302 தொகையை சுழற்சி நிதியொன்றல்லாது கடன்கொடுனர்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அத் தொகை எந்த நலனாளிடமிருந்து கிடைத்துள்ளது என உறுதி செய்து கொள்ளக்கூடிய எழுத்துமூல சான்றுகள் அதிகார சபையிடம் இருக்கவில்லை. பணம் அறவிடப்படாதது தொடர்பாக 193 | திவிநெகும நலனாளிகள் தொடர்பான பதிவேடொன்று திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரிவில் நடாத்திச் செல்லப்படுவதுடன் நலனாளிகள் நீதிமன்றத்தால் நிச்சயிக்கப்பட்ட அத்தொகையை நீதிமன்றத்திற்கு செலுத்திய சந்தர்ப்பங்களை போன்றே தவணைகளாக திமன்றத்திற்கு செலுத்திய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை, நீதிமன்றத்தால் அதிகார சபை சார்பில் அறவிடும் அனைத்து வகையான தொகைகளும் மாதாந்தம் காசோலை மூலம் அனுப்பப்பட்ட போதும் அவ்வாறு அறவிடப்பட்ட அத் தொகை பற்றிய விரிவான அறிக்கை சரியாக சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்கள் காரணமாக இந்த பதிவேட்டை இற்றைப்படுத்துவது சிக்கலான நிலையில் காணப்படுகின்றது. | நலனாளிகளிடம் இருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிட சரியான முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 3,572,500 தொகை கடனை அறவிடுவதும் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. | | |
| (உ) | வேக்கயா மீன் இனவிருத்தி நிலையம் மற்றும் கரடிய அலங்கார மீன் இனவிருத்தி 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நிறைவடைந்தது.இதற்காக ரூபா 309,976,861 மற்றும் ரூபா 212,124,697 செலவிடப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>(i) மேற்குறித்தவாறு செலவு செய்யப்பட்ட போதிலும் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2022 திசெம்பர் 01 திகதியன்று வேக்கயா மீன் இனவிருத்தி நிலையத்தை ரூபா 144,316,000 ஆகவும் கரடிய அலங்கார மீன் இனவிருத்தி நிலையத்தை ரூபா 129,010,00 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்தன. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை 4/2018 இன் பத்தி 2.2.2.2 இன் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் சந்தை பெறுமதியை நிர்ணயிப்பது சரியாகனதல்ல. எனவே 2014.01.01 முதல் 2018.12.31 வரையான காலப்பகுதி அல்லது அதற்குப் பின்னர் நிர்மாணித்த கட்டிடங்களிற்காக இந்த காப்பகுதியில் நிர்மாணித்துள்ள கட்டிடங்களை மீண்டும் ஒருமுறை மறுமதிப்பீடு செய்ய தேவையில்லை. | நிதி இழப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) இந்த இனவிருத்தி நிலையங்களிற்காக மதியுரை சேவைகளை வழங்கியிருந்தது ஒரே தனியார் நிறுவனத்தினால் ஆவதுடன் அதற்காக அந்த நிறுவனத்திற்கு ரூபா 46 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பட்டியல்களின் பூர்த்தியடைந்த வேலை பெறுமதிகளை உறுதி செய்ய அதிகாரசபையில் பொறியியல் பிரிவொன்று இருக்கும் போது அந்த மதியுரை நிறுவனத்தினால் மேற்கொண்டுள்ளமை சரியானதா என்பது பிரச்சினையாகவுள்ளது. | அந்த பதியுரை நிறுவனத்தினால் தெளிவாக குறித்த வேலை பெறுமதிகள் உறுதி செய்துள்ளதாக குறித்த சான்றிதழ்களில் இருந்து தெளிவாகிறது. | பூர்த்தியான வேலை பெறுமதிகளை உறுதிப்படுத்துதல் தொடர்பாக சரியான முறைமை ஒன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (iii) வேக்கயா மீன் இனவிருத்தி நிலைய உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாததால், | பதில் வழங்கப்படவில்லை. | வேக்கயா மீன் இனவிருத்தி நிலையத்தை உற்பத்தி |

| | | | |
|---|---|---|---|
| | இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலவிட்ட ரூபா 309,976,861 தொகை மற்று அதற்காக 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு முதல் மேற்கொண்ட ரூபா 9,366,143 ஆன மீண்டுவரும் செலவுகள் விளைவற்ற செலவாக ஆகியிருந்தது. | | நடவடிக்கைகளுக் காக பயன்படுத்த வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்த்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீன் தாங்கிகளின் கொள்ளவு மற்றும் 2022 ஆண்டில் 4 நிலையங்களில் 34320 மீற்றர் பரப்பளவு கொண்ட மீன் தாங்கிகள் விளைவற்று காணப்பட்டதுடன் றம்படல்ல அலங்கார மீன் தாங்கிகளிற்கிடையில் 200 தாங்கிகள் திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்ட போதும் செயற்பாட்டு உற்பத்தி நிலைக்கு ஆக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடவளவ புதிய நிலையத்தில் விளைவற்று நிலவிய 6,700 மீற்றர் பரப்புளவு தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாண்டு மார்ச் மாதம் முதல் நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு ஈடுபத்தப்பட்டுள்ளது. இங்கினியாகள நிலையத்தில் விளைவற்று நிலவிய 4,500 மீற்றர் பரப்புளவில் தற்போது 1,750 மீற்றர் பரப்பளவு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளிற்கு ஈடுபத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 2,750 மீற்றர் பரப்பளவு 2024 ஆண்டினுள் திருத்தப்பட உள்ளதென. முருதவெல நிலையத்தில் விளைவற்று நிலவிய 8,360 மீற்றர் பரப்பளவு தற்போது 02 குளங்கள் 1,600 மீற்றர் பரப்பளவு திருத்தப்பட்டு வளர்ப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இரணமடு நிலையத்தில் விளைவற்று நிலவிய 3,510 மீற்றர் பரப்பளவு தற்போது திருத்த வேலைகளை செய்து வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2024 ஆண்டினுள் உற்பத்தி செயற்பாடுகளிற்காக ஈடுபடுத்தப்படவுள்ளது.<br>உடவளவ நிலையத்தில் விளைவற்று நிலவிய 21,300 மீற்றர் பரப்பளவு பல ஆணடுகளாக செயற்படு நிலையில் இல்லாததுடன் இதுவரை திருத்த வேலைகளிற்காக ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | மீன் தாங்கிகளின் கொள்ளவை செயற்படு உற்பத்தி நிலைக்கு ஆக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இரத்து செய்யப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 11,213,291 தொகையை | 2021/R/MURL/01 ஒப்பந்தம் தொடர்பாக கணக்கீடு செய்துள்ள பெறுமதியிலிருந்து ரூபா 8,147,748 தொகை நியாய தீர்மானத்தின் | அறவிட வேண்டியுள்ள தொகையை நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மீயாய்வாண்டு திசெம்பர் 31 வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | போது வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் முற்பண பிணைமுறியிலிருந்து அறவிட்டு எஞ்சிய தொகை ஒப்பந்த கம்பனிக்கு மீண்டும் செலுத்தப்பட்டது. கணக்குகளின் பிரகாரம் மீதி மற்றும் அறவிடப்பட்ட பெறுமானத்திற்கு இடையேயான வித்தியாசம் 2024 ஆண்டின் கணக்குகளில் சீராக்கப்படவுள்ளது.<br><br>2021/R/MURL/02 ஒப்பந்தம் தொடர்பாக அறவிடப்படவுள்ள தொகைக்காக ஒப்பந்த கம்பனிக்கு சட்ட அலுவலரினால் அனுப்பிய கடிதத்திற்கு அளிக்கப்பட்ட பதிலுக்கான ஆலோசனை கோரி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் முன்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பவுள்ளது. | எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வெளிநாட்டு மானியமாக அதிகார சபைக்கு கிடைத்திருந்த ரூபா 10,454,968 வெளிநாட்டு மானியங்களிலிருந்து குறித்த நோக்கத்திற்காக ரூபா 878,423 தொகை அதாவது 8.40 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு இருந்தது. | 2022.12.31 திகதியளவில் ரூபா 7,697,742.00 தொகை ILO நிறுவனத்தினூடாக எமது அதிகார சபைக்கு கிடைத்துள்ளதுடன் அந்த மானியத்தின் மூலம் பல்வேறு உபகரணங்கள் மற்றும் வலை வகைகளை கொள்வனவு செய்ய 2023 ஆண்டில் ஆரம்பித்த போதும், போதிய வழங்குனர்களை தேடிக் கொள்ள முடியாததன் மீது அந்த கொள்வனவு பூரணமாகவில்லை. அதன் பிரகாரம், மீண்டும் விலைமனு கோர நடவக்கை எடுத்து அந்த உபகரணங்களை மற்றும் வலை வகைகளை கொள்வனவு செய்ய நடடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அதிகார சபைக்கு கிடைத்திருந்த அனைத்து வெளிநாட்டு மானியங்களும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதியுரை சேவை நிறுவனமொன்றிற்கு 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் செலுத்திய ரூபா 4,683,789 ஆன தொகைக்குரிய மதியுரை சேவைகளை பூர்த்தி செய்திருக்காத போது மீண்டுமொரு முறை 2022 ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் உயிரின பூங்காவொன்றை நிர்மாணிப்பதற்காக | இங்கு குறிப்பிடப்படும் கருத்திட்டங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான இடமாவதுடன் அவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட Conceptual Plan இன் பிரகாரம் குறித்த சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும் EOI அழைப்பித்து முதலீட்டாளர்களிற்கு பங்குகளை | மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் உயிரின பூங்காவொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடல் மற்றும் நிர்மாண மதியுரை சேவை நடவடிக்கைகளை அந்த நிறுவனத்திற்கே ரூபா 4,219,408 தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது.<br>மிளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரூபா 1,538,750 தொகை மூலதமாக்கி இருந்த போதும் குறித்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் எதிர்பார்த்த நோக்கம் அடையப் பெற்றிருக்காததுடன் அந்த கொடுப்பனவும் விளைவற்ற செலவாகவிருந்தது. | வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். | |
| (ஆ) | காலி சமனல பூங்காவில் அலங்கார மீன்கள் அலகை (Ornamental Fish Display Unit) மேம்படுத்துவதற்காக அதிகார சபையினால் ரூபா 13,135,274 தொகை செலவிட்டுள்ள போதும் அலங்கார மீன்கள் அலகு உரியவாறு செயற்படாததால் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவாக காணப்பட்டது. | மேற்குறித்த சமனல பூங்காவில் அலங்கார மீன்கள் அலகின் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக நகர சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளதுடன், அதன் குறைபாட்டு நடவடிக்கைகளை ஒப்பந்ததாரரிடமிருந்து நிறுத்தி வைத்த தொகையிலிருந்து மேற்கொண்டு சரிசெய்வதற்கான அறவித்தல் ஒப்பந்ததாரரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். | காலி சமனல பூங்காவில் அலங்கார மீன்கள் அலகை உரியவாறு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களினால் அதிகாரசபையின் பிரயோசனத்திற்காக அமைச்சிற்கு ஒப்படைத்திருந்த 137.0294 ஹெக்டேயார் அளவான மன்னார் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் 02 காணிகள் மற்றும் இரண்டு ஏக்கர்கள் வீதமான முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் 02 காணிகள் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டன. | கட்டிட நிர்மாணத்திற்காக தேவையான அளவு பணம் ஆசிய அபிவித்தி உத்தேச கருத்திட்டத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாததால், அந்த வேலைகளை மேற்கொள்ள முடியாது போனது. மேலும் மேற்குறித்த காணிகள் இதுவரை அதிகார சபைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. அந்த ஒப்படைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற பின்னர் இந்த காணிகளை ஆக்கபூர்வமாக முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றன. | அதிகார சபையின் பயன்பாட்டிற்காக வழங்கியிருந்த சொத்துக்களை பயன்படுத்த நடவபடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அதிகார சபைக்கு உரித்தற்ற 1361.76 ஹெக்டேயார் ஆன 04 காணிகளின் மற்றும் பரப்பளவை இனங்காண முடியாத காணியொன்றின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக 2017 ஆண்டு முதல் ரூபா 107.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ள போதும் 2024 மே 05 திகதி வரை எவ்வித கருத்திட்டத்தையும் | இந்த காணிகளை விடுவித்துக் கொள்ள நடைமுறையாக நீண்ட காலம் செல்வது இந்த கருத்திட்டத்தை ஆரம்பிக்க பிரதானமான காரணமாகும். கல்முள்ள கருத்திட்டத்தை இந்த ஆண்டு ஆரம்பிக்க நடடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஏனைய கருத்திட்டத்தையும் கிட்டிய எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்த | உட்கட்டமைபு அபிவிருத்தி செய்த காணிகளில் குறித்த கருத்திட்டத்தை ஆரம்பிப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பித்திருக்காததால் அந்த செலவுகள் விளைவற்ற செலவுகளாகவிருந்தன. | கருத்திட்டதிற்காக செலவிட்டுள்ள ரூபா 107.6 மில்லியனான தொகைளை விளைவற்ற செலவாக கருத முடியாது. | |
| (உ) | திலாப்பியா மீன்களுக்கு தேவையான தீன்களை உற்பத்தி செய்வதற்காக 2019 ஒக்டோபர் 08 ஆம் திகதி ரூபா 11,802,000 பெறுமதியான உடவலவ மீன் தீன் தயாரிப்பு நிலையத்தில் நிறுவப்பட்டிருந்த மீன் தீன் உற்பத்தி இயந்திரத்தின் மூலம் வருடாந்தம் திலாபியா மீன் தீன் கிலோ கிராம் 127,000 இனை உற்பத்தி செய்ய எதிர்பார்த்த போதும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் கிலோ கிராம் 36,612 மற்றும் கிலோ கிராம் 38,361 அதாவது 28 சதவீதம் மற்றும் 30 ஆன சதவீதம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. தற்போது இந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரத்தை அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சிகாக முன் நடாத்திச் செல்வதற்காக தற்போது அபிலாஷைகள் கோரப்பட்டுள்ளதுடன் இந்த கூட்டு முயற்சிக்காக பெறுமதியை மதிப்பீடு செய்ய 2023.03.15 திகதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. தற்போது இந்த இயந்திரம் மற்றும் கட்டிடம் மதிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை. இந்த மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் இதனை அரச மற்றும் தனியார் முயற்சியாக நடாத்திச் செல்ல தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திலாப்பியா மீன்களுக்கு தேவையான தீன்களை உற்பத்தி செய்யும் இயந்திரத்தை பிரயோசனப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 03 கருத்திட்டங்களிற்காக ரூபா 6,929,664 ஆன மதியுரை சேவைக் கட்டணம் செலுத்தியிருந்த போதும் அக் கருத்திட்டங்கள் நடைமுறையாகாததால் அந்த தொகை விளைவற்ற செலவாக ஆகியிருந்தது. | ஒரு கருத்திட்டத்தின் காணிப் பிரச்னையை தீர்த்துக் கொண்ட பின்னர் உத்தேச திட்டம் பிரகாரம் கருத்திட்டத்தை செயற்படுத்த நடவபடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். மேலுமொரு கருத்திட்டம் தொடர்பாக தற்போது மதிப்பிற்குரிய நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் முன்நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். மற்றைய கருத்திட்டத்தை செயற்படுத்த செல்லும் போது ஏற்பட்ட தடைகள் மற்றும் எதர்ப்புக்களை அகற்றிய பின்னர் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் அபிலாஷைகளை அழைப்பித்து (EOI) முதலீட்டாளர்கள் ஊடாக குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்வதாக தயவுடன் அறிவிக்கிறேன். | மதியுரை சேவைக் கட்டணம் செலுத்தியிருந்த 03 கருத்திட்டங்களை விரைவில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |